# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in


## முன்னிலை: திரு.ஆ.தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்

### மேல்முறையீட்டு மனு எண்44 /2016

திருமதி. தி. முத்துலட்சுமி,
எண்.9, முதல் குறுக்கு தெரு,
காந்தி சாலை,
மிட்டணமல்லி,
I.A.F. ஆவடி,
சென்னை–55. . . . . மேல் முறையீட்டாளர்
(திருமதி.T. முத்துலட்சுமி)

எதிர்

1) செயற் பொறியாளர் / இ&ப/ஆவடி,
சென்னை மின்பகிர்மான வட்டம் /மேற்கு,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
229, என்.எம். ரோடு,
ஆவடி, சென்னை–54.

2) உதவி செயற்பொறியாளர்/இ&ப/பட்டாபிராம்,
சென்னை மின்பகிர்மான வட்டம் /மேற்கு,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/11 துணை மின்நிலைய வளாகம்,
பட்டாபிராம், சென்னை–72.

3) உதவி பொறியாளர்/இ&ப/மிட்டணமல்லி,
சென்னை மின்பகிர்மான வட்டம் /மேற்கு,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சென்னை–55. . . . . . . எதிர்மனுதாரர்கள்
(திரு. ரங்கநாதன், செயற்பொறியாளர்/ஆவடி,
திரு. புவனேஸ்வரன், உதவி செயற்பொறியாளர்/பட்டாபிராம் &
திரு. தருமன் உதவி பொறியாளர்/மிட்டணமல்லி)

## ஆணை நாள்:27.2.2017

1. திருமதி. முத்துலட்சுமி, ஆவடி, அவர்களின் 19.5.2016 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.44/2016 ஆக பதிவு செய்யப்பட்டது.

2. மேல்முறையீட்டாளருக்கு சொந்தமான மனை மிட்டணமல்லி கணேஷ் நகர் விரிவு பகுதியில் உள்ளது. அந்த மனையின் முன்பாக 40 KVA மின்மாற்றி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மின்மாற்றியினை வேறு இடத்தில் வாரிய செலவில் மாற்றி அமைக்க வேண்டும் என்று மேல்முறையீட்டாளர் கோரியுள்ளார்.

3. மேற்கண்ட மேல்முறையீட்டு மனுவின் நகல் எதிர்மனுதாரர்களுக்கு இசைவிணக்கம் எதுவும் ஏற்படவில்லை எனில் பதிலுரையை சமர்ப்பிக்க வேண்டும் என்று 26.5.2016 நாளிட்ட மின்குறைதீர்ப்பாளரின் அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்பட்டது.

4. எதிர்மனுதாரர் தன்னுடைய பதிலுரையை 17.6.2016 அன்று சமர்ப்பித்துள்ளார்.

5. மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 17.8.2016 மற்றும் 20.9.2016 ஆகிய நாட்களில் கேட்புரை நடத்தப்பட்டது.

6. கேட்புரை நடந்த இரு நாட்களிலும் மேல்முறையீட்டாளர் திருமதி. முத்துலட்சுமி அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

7. எதிர்மனுதாரர்–1 திரு. ரங்கநாதன், செயற்பொறியாளர்/ஆவடி, எதிர்மனுதாரர்–2 திரு. புவணேஷ்வரன், உதவி செயற்பொறியாளர்/பட்டாபிராம் மற்றும் எதிர்மனுதாரர்–3 திரு. தருமன், உதவி பொறியாளர்/மிட்டணமல்லி ஆகியோர்கள் கேட்புரையில் கலந்து கொண்டு தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைத்தனர்.

8. கேட்புரை நாளில் எதிர்மனுதாரர் கணேஷ் நகரில் மேல்முறையீட்டாளர் ஆட்சேபனை செய்யும் மேற்கண்ட மின்மாற்றியை அமைப்பதற்கு இடத்தை தேர்வு செய்து தந்தது கணேஷ் நகர் விரிவாக்கம் குடியிருப்போர் நல சங்கம் என்பதால் அந்த குடியிருப்போர் நல சங்கத்திற்கு மேற்கண்ட மின்மாற்றியை திருமதி. முத்துலட்சுமி அவர்கள் மாற்றி அமைக்க வேண்டும் என்று கோருவதால் மின்மாற்றியை மாற்றி அமைக்க தகுந்த இடத்தை தேர்வு செய்யவும் மின்மாற்றியை மாற்றி அமைக்க ஏற்படும் மதிப்பீட்டு தொகையை செலுத்த கோரியும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்றும், கட்டணம் செலுத்திய பின்பு மின்மாற்றி மாற்றி அமைக்கப்படும் என்றும் வாதிட்டார்.

8. மேலும், 23.1.2017 நாளிட்ட மனுவில் செயற்பொறியாளர்/ஆவடி அவர்கள் கணேஷ் நகர் விரிவாக்கம் குடியிருப்போர் நல சங்கம் மின்மாற்றியை மாற்றியமைக்க மதிப்பீட்டு கட்டணம் செலுத்துவற்கு சம்மதம் தெரிவிக்கவில்லை என்றும் ஆனால், திரு. வடிவேல், எண்.5, CGRF நகர் மிட்டணமல்லி என்பவர் மேற்கண்ட 40KVA (R-APDRP) மின்மாற்றியை அவரின் வீட்டிற்கு அருகில் உள்ள இடத்தில் மாற்றம் செய்யவும், அதற்குண்டான கட்டணத்தை செலுத்தவும் ஒப்புதல் அளித்துள்ளார் என்று தெரிவித்து அவர் மதிப்பீட்டு கட்டணம் செலுத்திய உடன் மின்மாற்றி மாற்றியமைக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

9. மேல்முறையீட்டாளர், தனது 20.2.2017 நாளிட்ட மின்குறைதீர்ப்பாளருக்கு எழுதியுள்ள கடிதத்தில் 20.2.2017 அன்று எதிர்மனுதாரர்கள் அவரது மனையின் முன்னால் நுழைவுவாயிலில் இருந்த மின்மாற்றியை அகற்றிவிட்டார்கள் என்று தெரிவித்துள்ளார். அந்த 20.2.2017 நாளிட்ட கடிதத்தின் சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*"நான் தங்கள் அலுவலகத்திற்கு கடந்த வருடம் செப்டம்பர் மாதம் 20ம் தேதி (20.9.2016) அன்று விசாரணைக்காக வந்திருந்தேன். மின் வாரிய அதிகாரிகளும் வந்திருந்தனர். கணேஷ் நகர் விரிவுப் பகுதி நலச் சங்கத்திடம் பேசி மின்மாற்றியை வேறு இடம் மாற்ற மின் வாரிய அதிகாரிகளுக்கு 2 வார காலம் அவகாசம் தந்தீர்கள். மீண்டும் எங்களை அக்டோபர் 5ம் தேதி (5.10.2016) வரச் சொன்னார்கள்.*

*xxxx xxx xxxx*

*xxx xxx xx x xx*

*இவ்வாறு ஒரு வாரம், ஒரு வாரம், ஒரு வாரம் என்று கேட்டு கேட்டு நான்கு மாதங்கள் ஓடிவிட்டன. ஒரு வழியாக இன்று (20.2.2017) என் இடத்தின் முன்னால் நுழைவுவாயிலில் இருந்த மின்மாற்றியை அகற்றி விட்டார்கள் என்பதை மிகவும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தங்களுக்கும் என் நன்றியை மனமாரத் தெரிவித்துக் கொள்கிறேன். "*

10. மேல்முறையீட்டாளர், தனது 20.2.2017 நாளிட்ட கடிதத்தில் 20.2.2017 அன்று எதிர்மனுதாரர்கள் அவரது மனையின் முன்னால் நுழைவுவாயிலில் இருந்த மின்மாற்றியை அகற்றிவிட்டார்கள் என்று தெரிவித்துள்ளதால் மேல்முறையீட்டாளரின் கோரிக்கையான அவரது மனையின் முன்னால் நுழைவுவாயிலில் உள்ள மின்மாற்றியை அகற்றவேண்டும் என்ற கோரிக்கை நிறைவேறிவிட்டது. எனவே, மேல்முறையீட்டு மனு எண்.44/2016 இத்துடன் முடித்து வைக்கப்படுகிறது என்று தீர்வு செய்யப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திருமதி. தி. முத்துலட்சுமி,
எண்.9, முதல் குறுக்கு தெரு,
காந்தி சாலை,
மிட்டணமல்லி, I.A.F. ஆவடி, சென்னை–55.

2) செயற் பொறியாளர் / இ&ப/ஆவடி,
சென்னை மின்பகிர்மான வட்டம் /மேற்கு,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
229, என்.எம். ரோடு,
ஆவடி, சென்னை–54.

3) உதவி செயற்பொறியாளர்/இ&ப/பட்டாபிராம்,
சென்னை மின்பகிர்மான வட்டம் /மேற்கு,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/11 துணை மின்நிலைய வளாகம்,
பட்டாபிராம், சென்னை–72.

4) உதவி பொறியாளர்/இ&ப/மிட்டணமல்லி,
சென்னை மின்பகிர்மான வட்டம் /மேற்கு,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சென்னை–55.

5) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
சென்னை மின்பகிர்மான வட்டம்/மேற்கு
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
11/33 கே.வி. திருமங்கலம் துணை மின் நிலையம்,
அண்ணா நகர், சென்னை – 600 040.

6) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

7) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

8) உதவி இயக்குநர் (கணினி) – **மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.